Ph: 04175- 236654 I 235295

# SHANMUGA INDUSTRIES
## ARTS AND SCIENCE COLLEGE

Certified under section2(f) of UGC Act -(An ISO 9001 : 2008 Certified Institution)

Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and approved by the Govt.of .Tamilnadu & AICTE
manalurpettai Road ,Tiruvannamalai - 606 603.

**"ஒழுக்கத்தைக் கடைபிடித்தால் வாழ்க்கையில் உயரலாம்" சண்முகா கல்லூரி முதலாமாண்டு வகுப்புகள் தொடக்க விழாவில் ஐ. ஆர் .எஸ் தேர்வில் வெற்றிபெற்றுள்ள ஜெ. விஜயலட்சுமி பேச்சு**

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு வகுப்புகள் தொடக்க விழா நடைபெற்றது. விழாவிற்கு அறக்கட்டளை உறுப்பினர் திரு. **பி. இராமசந்திர உபாத்தியாயா** தலைமைத்தாங்கினார். செயலர் மற்றும் தாளாளர் **திரு. என். குமார்** அவர்கள் முன்னிலை வகித்தார். கல்லூரியின் தலைவர் திரு. **எம்.என்.பழனி,** பொருளாளர். திரு. **கோ. இராஜேந்திரகுமார்** வாழ்த்துதலோடு நடைபெற்ற இந்நிகழ்வில், முன்னதாகக் கல்லூரியின் முதல்வர் முனைவர். **கே. ஆனந்தராஜ்** வரவேற்புரையாற்றினார். துணைத்தலைவர் **ஜி. புல்லையா,** இணைச்செயலர். **டி.ஏ.எஸ். முத்து,** அறக்கட்டளை உறுப்பினர்கள் திருமதி. **கலைமணி,** திருமதி. **இராஜகுமாரி,** திரு. **திருநாவுக்கரசு,** திரு. **விஜய்ஆனந்த்,** திரு. **இரவிக்குமார்,** திரு. **ஸ்ரீதர்,** கல்விப்புல முதன்மையர். **பேரா.அழ.உடையப்பன்,** மாவட்ட நூலக அலுவலர் திருமதி. **கோகிலவாணி** உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். இந்நிகழ்ச்சியைத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் **வெ.இராமு** தொகுத்து வழங்கினார்.

தொடக்கவிழாவில் ஐ.ஆர்.எஸ் தேர்வில் வெற்றிபெற்றுள்ள திருவண்ணாமலை மாவட்டம் போளூரைச் சார்ந்த செல்வி. **ஜெ. விஜயலட்சுமி** விழாப்பேருரை நிகழ்தினார். கல்லூரியில் படிக்கும் போதே நூலகத்தை நாடவேண்டும். உயர்ந்த இலட்சியத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். தொடர்ந்து முயற்சி செய்தால் வெற்றியடைலாம். தோல்விகளை வெற்றிகளாக மாற்றிக்கொள்ள படிக்கும்போதே வளமான சிந்தனைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். போட்டித்தேர்வுகளுக்கு தயாராக வேண்டும். TNPSC போலவே UPSC, வங்கிப் பணிகள் போன்றவற்றிற்குத் தயாராக வேண்டும். குறைகளை நிறைகளாக மாற்றிக்கொண்டு வாய்ப்புகளைச் சரியாக பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

இத்தொடக்க விழாவில் அறக்கட்டளை உறுப்பினர்களும், 17 துறைகளில் சேர்ந்துள்ள மாணவ, மாணவியரும், பெற்றோர்களும், உறவினர்களும், நண்பர்களும் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாட்டினைத் துறைத்தலைவர்களும், பேராசிரியர்களும், அலுவலகப் பணியாளர்களும் செய்திருந்தனர்.

தாளாளர்


சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரி
பல்கலைக்கழக மானியக்குழுவின் 2(f) மற்றும் 12B அங்கீகாரம் பெற்ற கல்லூரி,
திருவள்ளுவர் பல்கலைக்கழக நிரந்தர இணைவு பெற்றது, (ISO 9001 : 2015 தரச்சான்று பெற்றது)
மணலூர்பேட்டை சாலை, திருவண்ணாமலை- 606 603.
21
முதலாமாண்டு வகுப்புகள்
05.07.2017
சிறப்பு விருந்தினர்
SHANMUGA INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE CoEd
TIRUVANNAMALAI - 606 603.
SINCERITY
STUDY
SERVICE